விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | வைகாசி 03 | ஷவ்வால் பிறை 21 | இதழ்: 94

யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 17-05-1990


நயினை இறங்குதுறை:

## மரமின்மையால் திருத்தவேலை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் இறங்குதுறை மேடைக் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டிருப்பதால், அதனை தற்காலிகமாக திருத்தியமைப்பதற்கு 75 பனைமரங்கள் அல்லது தென்னைமரங்கள்தேவைப்படுவதாக கூறப்படுகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில்

## 18 நாட்களில் 403 விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டன

(மானிப்பாய்)

பதினெட்டு நாட்களில் 403 கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 16-ந் திகதி

(8 ம்பக்கம் பார்க்க)

★ வடக்கு - கிழக்கில் புலிகளை அனுசரித்து

# இலங்கை விவகாரத்தில் புதிய நிலைப்பாடு ஒன்றை இந்தியா பின்பற்றும்?

## கருணாநிதி வி. பி. சிங்கை சந்திக்கும்போது இதற்கு சாதகமான நடவடிக்கைகளை முன்வைப்பார்

(புதுடில்லி)

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் புலிகளை அனுசரித்து இலங்கை விவகாரம் தொடர்பாக இந்தியா புதிய நிலைப்பாடொன்றை கடைப்பிடிக்க கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்புதிய நிலைப்பாட்டின் புதுடில்லி ஆராயலாமெனவும் படி விடுதலைப் புலிகளுக்குச் ஏஜென்ஸி செய்திகள் தெரி சாதகமான செயற்பாட்டை விக்கின்றன.

தமிழக முதல்வர் திரு.மு கருணாநிதியும் இதற்கு சாதகமான சில நடவடிக்கைகளை அடுத்த சில வாரங்களுள் இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்கை சந்திக்கும் போது மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

மின்கம்பச்சரிவினால்

## மக்கள் பீதி

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி 1-ம் வட்டாரத்தின் நெசவுசாலைக்குப் பக்கத்தில் மின்கம்பச் சரிவினால் மின்கம்பிகள் மக்களின் தலையில் முட்டுமளவு தொங்கிக் கொண்டிருக்கின்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

காங்கேசன் - கொழும்பு

## ரயில் சேவை தாமதத்துக்கு எஞ்ஜின் பற்றுக்குறையே காரணம்!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை - கொழும்பு கோட்டை ரயில்சேவை தாமதமாக நடைபெறுவதற்கு ஒரே ஒரு ரயில் எஞ்சின் மாத்திரம் சேவையில் ஈடுபடுவதே காரணமாகும் என்று வட பகுதி ரயில்வே உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலை காங்கேசன்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

ஒரிஸா அகதிகள் விவகாரம்:

## உயர்நீதிமன்றில் சமர்ப்பித்த மனு தள்ளுபடியானது!

(சென்னை)

தமிழகத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 117 ஒரிஸா தமிழ் அகதிகளை விடுதலை செய்யுமாறு ஈ. பி. ஆர். எல். எவ். தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஒரிஸாவிலிருந்து அண்மையில் தப்பிய இவர்கள் ரயில் மூலம் தமிழ்நாடு வந்த போதும் வேறு இடங்களிலும் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறுகோரி கடந்த வாரம் மனு ஒன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்த மனுவை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. எல். என். சர்மா தள்ளுபடி செய்துள்ளார். மேலும் இவ்வாறான மனு ஒன்று சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருப்பின் அதனை தமது தீர்ப்பு கட்டுப்படுத்தாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து இவர்கள் அனைவரும் தொடர்ந்தும் தடுப்புககாவலில் வைக்கப்பட்டுள்ளனர். (சி)

கல்கத்தாவில்

## போலி பயணப் பத்திரங்களுடன் மூன்று இலங்கை இளைஞர்கள் கைது!

(கல்கத்தா)

கல்கத்தா விமான நிலையத்தில் கல்கத்தா குடிவரவு அதிகாரிகளினால் போலி இந்திய பாஸ்போர்ட், மற்றும் போலியான பயணப் பத்திரங்கள் வைத்திருந்த மூன்று இலங்கை இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

'ரோ' விவகாரம்:

## பிரதமர் சிங்கை விரைவில் தமிழக முதல்வர் சந்திப்பார்

(சென்னை)

இந்தியப்பிரதமர்திரு.வி.பி. சிங்கை விரைவில் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தவுள்ளதாக தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையில் மோதலையும், பிளவையும் ஏற்படுத்தும் விதமாக இந்திய புலனாய்வுதுறையான 'ரோ' தொடர்ந்தும் செயற்பட்டு வருவதையடுத்தே தாம் மிக விரைவில் பிரதமரை சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இலங்கையின் வடக்கு-கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதியும், சுமுக நிலைகுறித்தும் பிரதமரும், தமிழக முதல்வரும் பேச்சுக்கள் நடாத்துவார்களென்றும் அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## திருமதி கலா தம்பிமுத்து நேற்றுக் காலை காலமானார்!

(கொழும்பு)

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாம். தம்பிமுத்துவின் மனைவி திருமதி கலா தம்பிமுத்து நேற்று அதிகாலை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார்.

தமது கணவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான போது

(8-ம் பக்கம் பார்க்க)

## "போராளிகள் வன்முறையில்ஈடுபட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்"

### கலைஞர் கருணாநிதி இறுதி எச்சரிக்கை

[சென்னை]

இலங்கைத் தமிழ் போராளிகள் குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டால் தக்கநடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இலங்கைத் தமிழ் போராளிக் குழுக்கள் தமிழ்நாட்டில் ஆயுதங்களுடன் நடமாடுவது, வன்முறையில் ஈடுபடுவது போன்ற செயல்களை மாநில அரசு அனுமதிக்காது என்றும் இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் உடனடியாக வெளியேற்றப்படுவார்கள் என்

(8-ம் பக்கம் பார்க்க)

## நிவாரண கொடுப்பனவுகள்

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலை, நவாலி, ஆனைக்கோட்டை, உயரப்புலம், சங்கானை வடக்கு, சில்லாலை. மாகியப்பிட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 250, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3858]

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கு மிக அருகாமையில் சித்தன்கேணி நோக்கிச் செல்லும் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி சி. இரகுநாதன், மணியகாரர் வளவு, வட்டுக்கோட்டை. (சி 3864)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### சேவை

வீட்டுப்பாவனைப் பொருட்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்புகொள்ளவும். மகாலக்ஷ்மி தளபாட நிலையம் 206, முதலாங் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரிச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-3859)

### தேவை

ஸ்தாபனம் ஒன்றில் விற்பனையாளராக பணிபுரிவதற்கு G. C. E. (O/L) அல்லது A/L படித்தபெண்கள் தேவை. தொடர்புகொள்ளவும். மகாலட்சுமி தளபாட நிலையம், 206, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-3860)


## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்த ஓர் இளம் குடும்பப்பெண் விரக்தியுற்று நச்சு விதையை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

காரைநகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை எனும் (19 வயது) பெண்ணே தற்கொலை செய்தவராவார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் பகுதி உத்தியோகத்தர் செ. கோபாலகிருஷ்ணன் சாட்சிகளை நெறிப்படுத்தினர். விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் கணவனிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

இளம்பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சங்கானை தொட்டிலடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உதயகுமாரி நாகராசா (வயது 18) என்பவரே தற்கொலை புரிந்தவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்ஸிஸ் விசாரணையை மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் பகுதி பொலிஸ் உத்தியோகத்தர் வீ. கந்தசாமி சாட்சிகளை நெறிப்படுத்தினர். விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் பேத்தியாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# மன்னார் செய்திகள்

### புலிகளின் அலுவலகம்

மன்னாரில் தமிழீழவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மாவட்ட அலுவலகம் மன்னார் நகரமத்தியில் அமைந்துள்ளது இந்த அலுவலகம், வாரத்தில் திங்கள், புதன், ஞாயிறு தினங்களில் சிறப்பாக பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து மக்களின் பிரச்சனைகளை எல்லாம் தற்சமயம் சுமுகமாக இந்த அலுவலகம் ஊடாகத் தீர்த்து வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளையில் மன்னார்த்தீவுப்பகுதிகென ஓர் அலுவலகமும் விரைவில் திறக்கப்படவுள்ளதாகவும் மக்கள் முன்னணியின் சிரேட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

### மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

அண்மையில் வங்காலை, நறுவிலுக்குளம் என்னும் இடத்தில்மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம் பெற்றது இதற்கு நறுவிலுக்குளம் கிராமசேவை அலுவலர் திரு. அ. செல்வம் சீமான் சோசை தலைமைவகித்தார் நானாட்டான் உ. அ. அதிபர் எஸ். சிவலிங்கம் பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினார்.

### தமிழீழ இணக்க மன்றுகள்

மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்ப்பு கிடைக்கவும் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவும், தமிழீழ இணக்க மன்றங்கள் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு வெளிப்படுத்துவதோடு அதற்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் மக்களுக்கே உண்டு. இதற்கிணங்க தமிழீழஇணக்கமன்றுகள் அமைக்கப்படும். ஆரம்ப வேலைகள் மன்னார் மாவட்டத்தில்நடைபெற்று வருகின்றன.

இதன் நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட அரசியல்பொறுப்பாளர் திரு. அ. சுரேஸ் மேற்கொண்டு வருகின்றார்.

### இடமாற்றம்

மன்னார் கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. எஸ். சிறில் குரூஸ் இடமாற்றம் பெற்று, யாழ்ப்பாணம் கூட்டுறவுச்செயலகத்திற்குச் சென்றுள்ளார். அவரது இடத்திற்கு இதுவரையில் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

### மன்னாரில் பௌத்த பிக்குமார்

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், பௌத்த பிக்குமார் மன்னாருக்கு வந்து சென்றுள்ளனர். இவர்கள் குருநாகலில் இருந்து வெசாக் பண்டிகைக்காக அநுராதபுரம் வந்ததாகவும், மன்னாரைப் பார்க்க மிகவும் ஆவலாக இருந்தமையால் மன்னாருக்கு வந்ததாகவும் கூறினார்கள். பின் பேசாலை சென்று, அங்கே கடற்கரையில் ஏராளமாக மீன் பிடிப்பதைப் பார்த்து, அங்கேயே இரவைக் கழித்துவிட்டு, மறுநாட் காலையில் ரயில் மூலம் அநுராதபுரம் சென்றார்கள்.

### பனைவளக் கைத்தொழில் நிலையங்கள்

மன்னார் மாவட்டத்தில் பனைவளம் செறிந்து காணப்படும் இடங்களான துள்ளுக்குடியிருப்பு, கட்டுக்குடியிருப்பு, பருத்திப்பண்ணை, தலைமன்னார், தலைமன்னார்க் கிராமம் போன்ற இடங்களில் பனைவளர்ச்சியைப் பாதுகாத்து, அப்பனைகளிலிருந்து கிடைக்கும் மூலவளங்களைப் பெற்று, அப்பகுதியிலிருக்கும் படித்த இளம் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கும்முகமாக அண்மையில் சிறுதோப்பு, தலைமன்னார்க் கிராமம், பருத்திப்பண்ணை, பேசாலை போன்ற இடங்களில் பனைவளக் கைத்தொழில் நிலையங்களை, வடபகுதிப் பனை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் மன்னார் கற்பகம் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிலையங்களிலும 30க்கு குறையாத இளம் பெண்கள் இதில் கலந்துகொண்டு. பனை ஓலையிலிருந்து தொப்பிகள், கூடைகள், பைகள், பாய்கள் போன்றவை உற்பத்திசெய்யப்பட்டு விற்பனைசெய்யப்படுகின்றன இதன் நடவடிக்கைகளை மாவட்ட இணைப்பு அதிகாரி திரு. எம். இருதயராஜன் குரூஸ் மேற்கொண்டுவருகின்றார்.

## இளம் தாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நச்சுவிதையைஉட்கொண்டு தற்கொலை செய்துகொண்ட ஒரு இளம்பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த இருகுழந்தைகளின் தாயான கலாதேவி யோகலிங்கம் (வயது 22) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்ஸிஸ் மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரி பொலிஸ் உத்தியோகத்தர் செ. கோபாலகிருஷ்ணன் சாட்சிகளை நெறிப்படுத்தினர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டு சடலம் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

## குழந்தை கோரக்கொலை

[மாத்தளை]

வெசாக்தினக் கொண்டாட்டத்தின்போது செலவிடுவதற்கெனஎதிர்பார்த்திருந்தபணம் வீட்டுக்காரரிடமிருந்து தமக்குக் கிடைக்காத காரணத்தால் ஆத்திரம் கொண்ட வேலைக்காரன் வீட்டுக்காரரின் ஐந்து வயதுக் குழந்தையை கோடரியால் வெட்டிக்கொலை செய்ததுடன் மற்ற மூன்று பிள்ளைகளையும் வெட்டி படுகாயப்படுத்திய சம்பவம் மாத்தளைப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

மாத்தளைப் பகுதியிலுள்ள மகாவெல என்னுமிடத்தில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் காயமடைந்த பிள்ளைகள் மாத்தளை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகியிறனர்.

இப்படுகொலையுடன் சம்பந்தப்பட்ட நபர், பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (அ)

## பரீட்சை சான்றிதழ்

(கொககுவில)

அகில இலங்கை சைவ பரிபாலன சபையினரால் 1988ம் ஆண்டு சைவசமயப் பாடப் பரீட்சையில் தோற்றிய மாணவருக்கான பரீட்சைக்குரிய சான்றிதழ்களை பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களுக்கு வழங்குவதற்கென அவ்வப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவ்வப் பாடசாலை அதிபர்களினால் மிகவிரைவில் பரீட்சையில் தேறிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன என அறியப்படுகின்றது. (135)

## கால்நடை வளர்ப்போர் பாதிப்பு

(வடமராட்சி)

இருநாட்களுக்குமேலாகியும் கால்நடைச் சினைப்படுத்தும் ஊசி போட கால்நடை உத்தியோகத்தர்கள் சமுகமளிக்கவில்லையாம்.

வடமராட்சிக் கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடைகள் சினைப்படுத்தும் காலங்களில் கால்நடை இனப்பெருக்க நிலையத்தால் சினைப்படுத்துவதற்கென பதிவு செய்து இரு நாட்களாகியும் அதற்குரிய உத்தியோகத்தர்கள் வராமையால் ஊசி போடுவது தடைப்படுவதாக வருத்தம் தெரிவிக்கின்றார்கள். (51)

# கிழக்கு செய்திகள்

### அமைதியை குலைக்கும் தீய சக்திகள்

"தமிழர் வாழும் இடங்களில் இப்போது அமைதி நிலவுகின்றது. இந்த அமைதியை சீர்குலைக்க தீயசக்திகள் முயன்றுவருகின்றன. இதற்கு தமிழர் முஸ்லீம் ஆகிய எங்களைத்தான் பகடைக்காயாக மாற்றஎண்ணியுள்ளார்கள்".

இவ்வாறு அக்கரைப்பற்றில் பள்ளிவாசல் நம்பிக்கை பொறுப்பாளர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறைமாவட்ட அரசியல் பொறுப்பாளர் காஸ்ரோ தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; "கடந்தகாலங்களில் முஸ்லீம் சம்மேளனம் முஸ்லீம் மக்களின் பிரச்சனைகளை தீர்த்தது போன்று, தொடர்ந்து முழுப் பொறுப்புக்களையும் அவர்களுக்கு ஒப்படைக்கப் போகின்றோம்" என்றார்.

### இராணுவம் வெளியேற்றம்

சுமார் நூறு இராணுவவீரர்கள் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர். கடந்தஆறு மாதங்களாக இவர்கள் நிலைகொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### நிர்வாகிகள்

அக்கரைப்பற்று பனங்காடு, பட்டிநகர் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பஞ்சாயக் குழு உறுப்பினர் தெரிவு நடைபெற்றது.

தலைவர் சி. சிவஞானமூர்த்தி, செயலர் த. கைலாயபிள்ளை, பொருளாளர் சு. தில்லைநாயகம், கணக்காளர் த. பூபாலபிள்ளை.

### கண் பரிசோதனை

சுகாதார அமைச்சினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலவச நடமாடும் கண் பரிசோதனை நிலையம், கல்முனை ஆதார வைத்தியசாலையில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 3 கண்பரிசோதனை நிபுணரைக் கொண்ட இக்குழுவினர் சம்மாந்துறை. அக்கரைப்பற்று, அம்பாறை ஆகிய பகுதிகளிலும் கண் பரிசோதனைகளை இலவசமாக நடத்தவுள்ளனர்.

### நியமனம்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அக்கரைப்பற்று பிரதேச பொறுப்பாளராக 'றேகன்' நியமிக்கப்பட்டுள்ளார்.

## கோழிகளுக்கு நோய்

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் கோழிகளுக்கு சளி நோய் பிடித்துள்ளது. இது விடயமாக வடமராட்சிக்கால்நடை உத்தியோகத்தரின்உதவியைப் பொதுமக்கள் நாடி வருகின்றார்கள். (51)

## வடக்கு-கிழக்கு விவசாய போதனாசிரியர் தொழிற்சங்கம்

(பருத்தித்துறை)

வடக்கு கிழக்கு மாகாண விவசாய போதனாசிரியர்களுக்கான தொழிற்சங்கமொன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. தொழிற்சங்கத்தலைவராக வீ. தியாகராசாவும். ஐ. கேதீஸ்வரன் செயலாளராகவும், எம். கார்த்திகேயன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில்அங்கத்துவப் பிரதிநிதிகளால் மாவட்ட ரீதியாகப் பல தீர்மானங்கள் பிரச்னைக்கு கொண்டுவரப்பட்டு தீர்வு காணும்படி மகட்கப்பட்டது. அத்துடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் பொதுச்சபையிலிருந்தே தெரிவு செய்யப்படல் வேண்டும் என்ற காரணத்தாலும், சங்கத்தின் அங்கத்தவர் பலத்தை உறுதி செய்யவும் இம் மாதம் 27ம் திகதி வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் பொதுக்கூட்டமொன்று நடைபெறுமெனவும் சங்கச் செயலாளர் ஐ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (52)


## ஜனசக்தி விளையாட்டுக் கழகம்

ஜனசக்தி விளையாட்டுக்கழக ஆதரவுடன்
தேவராணி (பேபி) முருகதாஸ் ஞாபகார்த்த
வெற்றிக் கேடயத்திற்கான சுற்றுப்போட்டிகள்.

உடுவில் வலி தெற்கு, தெல்லிப்பளை வலி வடக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்கள் பங்குபற்றலாம்.

**ஆண்களுக்கான கரப்பந்தாட்டம்**
**பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்**

விண்ணப்பம் முடிவு திகதி:- 31 - 05 - 1990

தலைவர்,
**ஜனசக்தி விளையாட்டுக் கழகம்,**
மயிலணி வடக்கு, சுன்னாகம்.

(சி-3865)

# நிக்கரகுவாவில் பொது வேலை நிறுத்தம்

# புதிய அதிபருக்கு பெரும் தலையிடி

## அமெரிக்க உதவி கோரப்படுகிறது

(மனகுவா)

நிக்கரகுவாவில் கடந்த சிலதினங்களாக நடைபெற்றுவரும் நாடு தழுவிய பொதுவேலை நிறுத்தத்தால் நாடே முற்றுக ஸ்தம்பிதமடைந்துள்து. புதிய அதிபர் பதவி ஏற்று இருபது நாட்களுள் இந்த பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது. இதனை சமாளிக்கும் விதத்தில் சுமார் 40 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்குமாறு அமெரிக்காவை அவசரஉதவி கோரியுள்ளது.

200 சத வீத சம்பள உயர்வு கோரி சுமார் 75,000 அரச ஊழியர்கள் பொதுவேலை நிறுத்தில் ஈடுபட்டு வருகின்றனர். போக்குவரத்து, தொலைத்தொடர்பு மின்சாரம் இன்றி நாடே பெரும் குழப்ப நிலைக்குட்பட்டுள்ளது.

நிக்கரகுவாவின் புதிய அதிபர் திருமதி. வுமோரா பதவி ஏற்று 20 நாட்களுள் இந்த பொதுவேலை நிறுத்தம் இடம்பெற்றுவருவது திருமதிஷமோராவுக்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் அமைச்சர்களையும் அவர்களது அலுவலகங்களுக்கு செல்வதையும் தடைசெய்துள்ளனர்.

அதிபர் பதவியை புதிதாக ஏற்றுள்ளதால் பலாத்காரம் மூலம் இந்த வேலை நிறுத்தத்தை கட்டுப்படுத்த அதிபர் விரும்பவில்லையென அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனை சமாளிக்க அமெரிக்காவிடம் 40 மில்லியன் டொலர்நிதி உதவியும் கோரப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தத்தை முன்னுள் சண்டினிஸ்ர அரசே ஏற்பாடு செய்துள்ளதாகவும்' அரசு குற்றம் சாட்டியுள்ளது. எனினும் அமோக ஆதரவுடன் வெற்றிபெற்ற திருமதி ஷமோராவிற்கு எதிராக இவ்வாறுன வேலை நிறுத்தம் அவரது செல்வாக்குப் பற்றி பெரும் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

## ஆயுள்வேத சுகாதார வைத்திய அதிகாரிகள் பதவிகள்:

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மானிப்பாய்)

ஆயுள்வேத சுகாதார வைத்திய அதிகாரிகள் பதவிக்கான விண்ணப்பங்கள் குடியுரிமை உடையவர்களிடமிருந்து கோரப்படுகிறது.

இதற்கான வயதெல்லை 25 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும், கல்வித்தகைமைகள்: அரசினுல் அங்கீகாரம்பெற்ற ஆயுள்வேத கல்லூரி அல்லது நிறுவனமொன்றில் ஐந்து வருடகால கற்கைநெறியை பூர்த்தி செய்து ஆயுள்வேத சித்த அல்லது யூனுணி வைத்தியசாலை சம்பந்தமான டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 30ந் திகதிக்குமுன் ஆயுள்வேத ஆணையாளர் ஆயுள்வேத திணைக்களம் இல 129 கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை கொழும்பு 6, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

## சீனுவில் பலருக்கு மரண தண்டனை

## மன்னிப்புச் சபை கண்டனம்

(லண்டன்)

சீனுவில் கடந்த வருடம் இடம்பெற்ற ஜனநாயகபுரட்சி நடவடிக்கைக்குப்பின் ஆயிரக்கணக்கானேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

தியனென்மென் சதுக்கத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கைதுசெய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கானேரில் பலர் விசாரணை ஏதுமின்றி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டு வருவதாகவும் மன்னிப்புச்சபை கடுமையாக குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த வாரம் கைதானவர்களில் சுமார் 600பேர் விடுதலை செய்யப்பட்டபோதும் மேலும் ஆயிரக்கணக்கானேர் எதுவித விசாரணையுமின்றி தற்போது சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் பலர் மரண தண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. எனினும் மன்னிப்புச் சபையின் இக்குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டித்துள்ள சீனு உலக அரங்கில் சீனுவுக்கு எதிராக களங்கம் கற்பிக்க சர்வதேச மன்னிப்புச்சபை முயன்றுவருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது. (சி)

## ஜம்மு-காஷ்மீர் விவகாரம்

## அமெரிக்கா மத்தியஸ்தம்

## விஷேட பிரதிநிதி இரு நாடும் செல்வார்

(வாஷிங்டன்)

ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியா பாகிஸ்தானிடையே எழுந்து வரும் முறுகல் நிலையை சமாதான முறையில் தீர்க்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ்ஷின் விசேட பிரதிநிதி இரு நாடுகளுக்கும்செல்லவுள்ளார்.

இரு நாடுகளும் விட்டுக் கொடுக்காத ஓர் நிலையில் இருந்துவருவதாலும் இரு தரப்பிலும் அணுவாயுதங்கள் இருப்பதாலும் யுத்தநிலைஏதும் தோன்றும் பட்சத்தில் அது தெற்காசிய பிராந்தியத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதையடுத்தே இப்பிரச்சனைக்கு சுமுக தீர்வொன்றை காணும் பொருட்டு அடுத்த சில தினங்களில் அதிபர் புஷ்ஷின் விஷேச பிரதிநிதிமுதலில் ஒந்தியா செல்கிருர். அங்கிருந்து இவர் பாகிஸ்தான் செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஜம்மு-காஷ்மீர் விவகாரம் குறித்து அமெரிக்கா நடுநிலை வகித்துவருவதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப்பிரச்சனையில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவுகோரி பாகிஸ்தான் பிரதமர் பெனுஷிர் பூட்டோ முதற்கட்டமாக நேற்றுஈரான் பயணமானுர். (சி)

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்:

## தினமும் 350 விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

''தினமும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் கோரிகிட்டத்தட்ட முந்நூற்றைம்பது விண்ணப்பபத்திரங்கள் கிடைத்துவருகின்றன. ஆனுல் 150 அல்லது 200 பேருக்குத்தான் வழங்கும் நிலையில் உள்ளோம். மிகுதியானவைக்கு வழங்க முடியாத நிலை ஏற்படுகின்றது.''

இவ்வாறு யாழ். செயலக பதிவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்கூறியதாவது: தற்பொழுது இலக்கம் ஒருபக்கம் நிரப்பி வழங்கும் படிவங்கள் தட்டுப்பாடாக இருக்கின்றது. கொழும்பில் இருந்து படிவம் வநதவுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் விநியோகம் செய்யப்படும்''

மேலதிகமாக உள்ளவர்களுக்கு வழங்குவதற்கு எம்மிடம் உள்ள ஒரே ஒரு போட்டோஸ்டட் மெஷின் பழுதடைந்த நிலையிலிருக்கிறது. திருத்தி அமைத்தாலும்கூட இன்றைய நிலையில் வேலைப்பழுவை நீக்க முடியாது.''

(5-ம் பக்கம் பார்க்க)

## 'ஹெலி' விபத்தில் அறுவர் பலி

[டோக்கியோ]

ஜப்பானில் டோக்கியோ நகரில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தொன்றில் ஆறுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். விற்பனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பயணத்தின்போதே இவ்விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் ஆசிய ஹெலிகொப்டர்கள்கூட்டுத்தாபனத் தலைவரும் மற்றும் கூட்டுத்தாபன முக்கிய அதிகாரிகளும் பலியானுர்கள். இத்தாலிய தயாரிப்பான இவ்விமானம் விபத்துக்குள்ளானதன் காரணம்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த வாரம் ஜப்பானில் ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தொன்றில் எண்மர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## ஆஸ்திரேலியாவில்

## வெளிநாட்டவர் குடியேற்றம் கடும் எதிர்ப்புத் தோன்றலாம்

[சிட்னி]

ஆஸ்திரேலியாவில் வெளிநாட்டவர்கள் பெருமளவு குடியேற்றப்பட்டு வருவதை அந்நாட்டு மக்கள் எதிர்க்கக்கூடிய தோர் நிலை உருவாகி வருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பொன்று தெரிவிக்கின்றது.

ஆஸ்திரேலியாவில் மக்களின் தொகை மிகக் குறைவாகவுள்ளதாகக் கூறி அரசு வெளிநாட்டவர்களை பெருமளவில் குடியேற்றி வருகிறது. கடந்த 5 மாதத்தில் மாத்திரம் 1,40,000 வெளிநாட்டவர்கள் ஆஸ்திரேலிய பிரஜாஉரிமை பெற்றுள்ளனர்.

இத்தொகை மிக அதிகம் எனத தெரிவித்துள்ள ஆஸ்திரேலியர்கள் ஒரு காலத்தில் வெளிநாட்டவர்களின் தொகை தம்மைவிட கூடிவிடும் சாத்தியம் உருவாகி வருவதாகவும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி கடுமையான எதிர்ப்புகள் கிளம்பாதபோதிலும் பலர் இதனை காலப்போக்கில் கடுமையாக எதிர்க்கலாமென கருத்துக் கணிப்பு தெரிவிக்கின்றதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## தென்பகுதிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மாணவிகள் சுற்றுலா!

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி உயர்வகுப்பு மாணவிகள் அகில இலங்கை ரீதியிலான கல்விச் சுற்றுலா ஒன்றை அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி தே. தம்பிராசா தலை

(6ம் பக்கம் பார்க்க)

## உல்லாசப் பயணிகளுக்கு இப்படி ஒரு சோதனை

[திருமலை]

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கையினதும் குறிப்பாகத் திருமலையினதும், கடலோரக் காட்சிகளை படம்பிடிக்கும் எண்ணத்துடன் பல்லாயிரக் கணக்கான பணத்தை செலவிட்டு உல்லாசப்பயணம் மேற்கொண்டு வந்த வெளிநாட்டவர்கள் தாம் எடுத்த 'பிலிம்கள்' வெறும் வெற்று சுருள்களாகஇருக்கக்கண்டுவிரக்தியும் மனவேதனையும் அடைந்துள்ளனர்.

இந்தக்கதி உல்லாசப்பயணிகளுக்கு மாத்திரமல்ல உள்ளூர்ப் பத்திரிகையாளருக்கும் ஏற்பட்டதன் காரணமாக, இதுகுறித்து தாம் பிலிம் வாங்கிய சம்பந்தப்பட்ட ஸ்ரூடியோவை விசாரித்தபோது, சீல்பண்ணப்பட்ட பிலிம் சுருள்கள் தமக்கு பிரபல்யம் வாய்ந்த ஜப்பானிய ரகத்தைச் சேர்ந்தது என்றும், இவை தமக்கு அனுப்பப்பட்டபோது இவ்வாறே இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பயணத்துறையின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி நலன்பெறவேண்டும் என்று நம்பிக்கை வைத்துள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இத்தகைய மோசடியான முறையில் பிலிம்ரேல்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது மிகவும் கவலைக்கும், கவனத்துக்கும் உரியதென கருத்து வெளியிட்டுள்ளனர். [அ]

**மணிவாக்கு**

ஒழுக்கமில்லாத அழகு மணமில்லாத மலராகும்.
—ஆன்றோர் வாக்கு

# நமது நோக்கு

## போட்டிப் பரீட்சைக்கும் போகவேண்டுமா அங்கு?

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள நிர்வாக அமைப்புகள் சீராக நடைபெறப் பல அதிகாரிகள் தேவைப்படுகின்றனர்.

பற்ருக்குறையை நிவர்த்திசெய்யப் போட்டிப் பரீட்சை மூலம் வெற்றிடங்களை நிரப்ப முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன; பலர் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்.

இப்பரீட்சை கொழும்பிலேயே நடாத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனுற் பரீட்சார்த்திகள் பல தொல்லைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது.

மன்னர், திருமலை, யாழ்ப்பாணம் போன்ற பிராந்திய நிலையங்களில் இப்பரீட்சையை நடாத்தும்படி பல தொண்டர் நிறுவனங்கள் பரீட்சை ஆணையாளருக்கு அவசர மகஜர்களை அனுப்பியுள்ளன.

பிராந்திய நிலையங்களிற் பரீட்சையை நடாத்துவதால் பலருடைய இன்னல்களைப் போக்கமுடியும். தற்போதுள்ள சூழ்நிலையில்வினுத்தாள் பொதிகளை அனுப்புவதும், பரீட்சை மேற்பார்வையாளர்களை நியமிப்பதும் கஷ்டமான காரியமல்ல.

நெருக்கடி நிலைகளைச் சாட்டாகக் கூறி பிராந்தியப் பரீட்சார்த்திகளை அலைக்கழிப்பது எவ்விதத்திலும் நியாயமில்லை.

நியாயமான கோரிக்கைக்குப் பரீட்சைத் திணைக்களம் நிச்சயம் செவிசாய்க்கவேண்டும்!

## பாலம் திருத்தப்படவேண்டும்!

மன்னுர்த்தீவை இணைக்கும் பிரதான பாலம் பழுதடைந்துள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஆங்கிலேயர் காலத்திற்கு முன்பே இந்த இரும்புப் பாலம் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அவ்வப்போது திருத்த வேலைகள் செய்யப்பட்டதால் நீண்டகாலப் பாவனைக்கேற்றதாயிற்று.

ஆங்கிலேயர் காலத்திலே இது திருத்தி அமைக்கப் பட்டிருக்கின்றது.

கடல் மட்டத்திலிருந்து பதினைந்து அடி உயரத்தில் கட்டப்பட்ட பாலத்தின் சீரற்றநிலைமையினுற் போக்குவரத்துச் செய்வோருக்கு உயிராபத்தும் ஏற்படலாம்.

பல கிராமங்களிலிருந்து அரச கருமங்களுக்காகவும், வாணிபம், மற்றும் தேவைகட்காகவும் தினசரி பலர் இப்பாலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

துருப்பிடித்தல், சீமெந்துக்கல் உடைதல் போன்றவை இப்பாலத்தை விரைவாகப் பழுதடையச் செய்கின்றன.

இப்பாலம் முற்ருகப் பழுதடைந்தால் பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடலாம்.

எனவே, இதனைப் புனரமைப்பதற்குக் காலம் தாழ்த்தாது ஏற்ற நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படவேண்டும்.

# மட்டக்களப்பு பற்றிய ஒரு நூற்பட்டியல் - ஒரு மதிப்பீடு

மட்டக்களப்பு மாவட்டம் தொடர்பாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றைத் தொகுத்து ஒரு நூற்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னுள் நூலகர் திரு. ஜோன் செல்வராஜா அவர்களால் ஆக்கப்பட்ட இந்நூற் பட்டியல், மட்டக்களப்புப் பிரதேசம் தொடர்பான 873 பதிவுகளை 81 பக்கங்களிற் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமரர் ஜோன் செல்வராஜா முன்னுள் சங்கானைப் பொது சன நூலகராக இருந்தவர். கடந்த வருடம் ஏற்பட்ட சிறு வன்செயல் காரணமாகப் பொலநறுவையில் வெட்டிக் கொல்லப்பட்டார். அவர் மட்டக்களப்புப் பொது நூலகராகப் பதவியேற்றதும் அவர் மேற்கொண்ட முக்கியமான பணி, இந்த நூற் பட்டியலைத் தொகுப்பதாக இருந்தது. குறுகிய காலமே அவரால் மட்டக்களப்புப் பொது நூலகத்தில் சேவையாற்ற முடிந்தாலும், அந்தக் காலகட்டத்தில் வரலாற்றில் ஆழச் சுவடு பதிக்கும் வகையில் அவரது இந்த நூற்பட்டியல் தொகுப்பு முயற்சி அமைந்துள்ளது.

பாடங்கள் தூவி வகுப்பு முறையில் அல்லாமல், ஆங்கில அகரவரிசை ஒழுங்கில் வகுக்கப்பட்டுள்ளது. வாசகர் தமக்குத் தேவையான பாடத்தினை இலகுவில் கண்டுகொள்ளும் பொருட்டு நூற்பட்டியலின் பகுப்பாக்க முறையும் தனியாகத் தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பாடத்தின் கீழும் தரவுகள் முதலில் ஆங்கிலம், பின்னர் தமிழ் என்ற வகையில், 445 தமிழ்ப் பதிவுகளும், 428 ஆங்கிலப் பதிவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நூற் பட்டியலில், தொகுப்பாளரின் மிகவும் சிரத்தையான பணி தெரிகின்றது. பொது நூலகங்கள், நிறுவனங்கள் மட்டுமல்லாது தனியார் சேகரிப்புக்களில் இருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. பல கையெழுத்துப் பிரதிகளும் இங்கு பதிவு பெற்றுள்ளமை வரவேற்கத்தக்க ஒன்ருகும்.

இப்பட்டியலுக்கான அறிமுகம், ஈழத்தின் வரலாற்றையும், மட்டக்களப்பு மாவட்டத்தின் பங்களிப்பையும் கோடிட்டுக் காட்டும் வகையில் ஆராய்ச்சி நோக்கில் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு வரலாற்றில் மறக்கமுடியாத புயல்கள், வெள்ளங்கள் போன்றவற்றின் வரலாற்று நிகழ்வுகளை இரைமீட்கும் வகையில் இப்பட்டியல் வாயிலாக மீண்டும் நினைவு கூரப்பட்டுள்ளது.

இன்றைய தமிழ்ப் பிரதேச அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளினுல் இத்தகைய நூற் பட்டியல்களை 100 சதவீதம் பூரணமானதாக வெளியிட முடியாமல் உள்ளமை இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களை மாத்திரமல்ல, ஆராய்ச்சியில் ஈடுபடும் எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்ருகும்.

மட்டக்களப்பின் முன்னுள் நூலகர் திரு. என். ரட்ணே அவர்களால் மட்டக்களப்பு மாவட்ட நூற் பட்டியலுக்கு ஆரம்பத்தில் வித்திடப்பட்டது.

மாவட்டக் கலாசாரச் சபையில் அவர் நிகழ்த்திய 'மட்டக்களப்புத் தொடர்பான நூல்கள்' என்ற உரையும், சிறு நூற் பட்டியலும் 1977ல் 22 பககங்களுடன் வெளிவந்தது. இன்று வெளிவந்துள்ள இந்த நூற் பட்டியல் பூரணத்துவத்தை நோக்கிய பெரும் பாய்ச்சலாக உள்ளது. இந்த நூற் பட்டியலில் காணப்படும் குறைபாடுகளில் அரசியல் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமை குறிப்பிடத்தக்க ஒன்ருகும். அரசியல் (வகுப்பு 24) 15 ஆங்கிலப் பதிவுகளும், 7 தமிழ்ப் பதிவுகளும் மாத்திரமே தரப்பட்டுள்ளன. பாடங்களின் பிரிவுகள் ஆங்கில அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பினும் உப தலைப்புக்கள் அளவில் சிறிய எழுத்தில் அச்சிடப்படாமல் ஒரே அளவினதாக இருப்பதால் சில சமயங்களில் பிரதான பாடத் தலைப்புக்கும், அதன் கீழ் வரும் உப தலைப்புக்கும் இடையே 'சட்' என்று வேறுபாடு கண்டுகொள்வது சிக்கலாக உள்ளது.

இந்நூலை வெளியிடுவதில் அக்கறையுடன் செயற்பட்ட மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பிரதேச ஆய்வில் ஈடுபடும் எவராலும் மதிப்புடன் நோக்கப்படுவார்கள். இந்நூல், மட்டகளப்புப் பிரதேச வரலாற்றையும், ஈழத் தமிழர் பண்பாடு, கலை. கலாசார வரலாற்றையும் அறிந்துகொள்ளும் முயற்சியில் ஈடுபடும் எவருக்கும் பயனுள்ள ஒன்ருக அமையும் என்பது நிச்சயம்.

என். செல்வராஜா,
(நூலகர், ஈவ்லின் இரத்தினம் நிறுவனம்)

புங்குடுதீவு

## குடிநீர்ப் பிரச்சனை: தீர்க்க ஆலோசனை

(புங்குடுதீவு)

''புங்குடுதீவு மக்கள் குடிநீர் பிரச்சனையில் கடந்த பல வருடங்களுக்குமேலாக துன்பமடைந்து வந்துள்ளதை அறிவேன். நான் சமூகசேவைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு இலவசமாக தண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.''

இவ்வாறு புங்குடுதீவு அபிவிருத்தி சம்பந்தமாக நடைபெற்ற கலநதுரையாடலுக்கு தலைமைவகித்து உரையாற்றிய வேலணை பிரதேசசபை விசேட ஆணையாளர் திரு வே. கந்தசாமி குறிப்பிட்டார்.

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலக அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. லோகநாதன் கூறியதாவது:

இங்குள்ள மக்கள் குடிநீர்ப் பிரச்சனையால் பெரும்பாதிப்படைந்து வருகின்ருர்கள். இவ்விடயம் பாரிய பிரச்சனையாக மாறிவிட்டது.

இந்த நிலையினைமாற்றியமைப்பதற்கு மக்களோ, பொது ஸ்தாபனங்களோ மௌனம் சாதிக்கக்கூடாது. என்ருர்.

இக்கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மற்றும் புங்குடுதீவு, நயினுதீவு பல. நோ. கூ. சங்க தலைவர் திரு. ப.. கனகலிங்கம் முன்னுள் புங். நயி. பல நோ. சங்க தலைவர் திரு. சு. கருணுகரன் த. சுந்தரமூர்த்தி, வெ. செபமாலை ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினுர்கள்.

(101)

## மஹோற்சவம்

(உடுவில்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 18-ம் திகதி ஆரம்பமாகின்றது. 23ம் திகதி மஞ்சத்திருவிழாவும், 26ம் திகதி சப்பறமும், 27ம் திகதி தேர்த்திருவிழாவும், 28ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் மஹோற்சவக் கிரியைகளை செய்துவைப்பார். (109)

## பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் அருள்மொழி மணிகள்

கல்லைக் கடவுளாக்கு; கடவுளைக் கல்லாக்காதே.

மானிடர் சேவையே மாதவன் சேவை.

சென்றது ஒருபோதும் வராது. வருங்காலம் நிச்சயமில்லை ஆதலால் இன்றே, இப்போதே பவித்திரமான எண்ணம், சொல், செயல்களில் ஈடுபடு.

# பலதும் பத்தும்

## பிறந்தது எப்படியோ?

இன்றைய திரைப்பட இசை உலகில் கொடி கட்டிப்பறப்பவர்...? இளையராஜாதான்...!

இவர் இசையமைத்த முதல் திரைப்படம் எது தெரியுமா? ''அன்னக்கிளி'' முதல்பாடல்...? ''அன்னக் கிளி'' எனத் தொடங்கும் பாடல்.

இப்பாடல் மெட்டு எப்படிப் பிறந்தது...?

இவரது தாயார் நாட்டுப் பாடல்களைப் பாடுபவராம். சிறு வயது முதலே அவற்றைக் கேட்டு கேட்டு இளையராஜா உள்ளத்திலே அப்படியே பதிந்து விட்டனவாம்.

எனவே திரைப்பட முதற் பாட்டே தாயார் பாடிய நாட்டுப் பாடல் மெட்டிலிருந்து பிறந்திருக்கின்றது!

அதுசரி...! இன்று மினிபஸ்களிலே அடிக்கடி கேட்கும் ''மாங்குயிலே... பூங்குயிலே... என்ற பாடலின் மெட்டுஎப்படிப்பிறந்தது...?

''ஏறுமயில்... ஏறிவிளை... யாடுமுகம்... ஒன்றே...''- இந்தத் திருப்புகழின் பழைய சந்தமொன்றிலிருந்து பிறந்தாம்...!

இத்தகவலைத் தந்தவர்... யார்? இவர் தம்பி கங்கை யமரனே— தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில்—!

வாணி

## ஏன் இந்தப் பாரபட்சம்?

தமிழ்மக்களுக்கு மட்டும் கடவுச்சீட்டு திணைக்களத்தினர் பாரபட்சம் காட்டி வருகின்றமை வருந்தத்தக்கதாகும். வெட்கமுமாகும்.

சகல தமிழ் ஆவணங்களுக்கும் ஆங்கில மொழிபெயர்பபு கேட்கின்றனர். மற்றையவர்

# மக்கள் கருத்து

களை அப்படிக் கேட்பதில்லை.

மேலும் தமிழ் விண்ணப்பதாரர்களை மட்டும் கிராம சேவை சான்று G.A.M. 3 படிவத்தில் பகுதி உதவி அரசாங்க அதிபரால் 3 நாட்களுக்குள் கையொப்பம் பெற்று அனுப்பும்படி வற்புறுத்துகின்றனர். யாழ். கடவுச்சீட்டுப் பகுதியினரும் அப்படியேதான் செய்கின்றனர்.

இது இலங்கை அரசியல் யாப்புக்கும், ஐ. நா. மனித உரிமை அடிப்படைச் சாசனத்துக்கும் நேர்விரோதமானதாகும். சம்பந்தப்பட்ட அமைச்சர் கவனித்து எல்லோரையும் சமனுக மதிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைப் பணிக்கவேண்டும்.

யோ. அ. ஆனந்தம்

## ஞாபகார்த்தவிழா

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்க முன்னுள் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகத்தின் ஓராண்டு ஞாபகார்த்த விழா திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தின் சிருர்களால் நடத்தப்பட்டது.

சைவ வித்தியா விருத்திச் சங்க காரியாலயத்தில் அமைந்த தியான மண்டபத்தில் அன்னுரின் திருஉருவத்திற்கு மாலை அணிவித்து சிருர்களினுல் பிரார்த்தனைக் கூட்டமும் நடைபெற்றதுடன் அன்னுரின் பெயரால் சிருர்களுக்கு மதியபோசனமும் வழங்கப்பட்டது. (த)

பாராளுமன்றத்தில்

# போதைவஸ்துக் கடத்தலுக்கு ஏயர் லங்கா - குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் உடந்தை

பாராளுமன்றம் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தலைமையில் கூடியது.

எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா வெளிநாட்டு (பெல்கிரேட்) பயணத்தை மேற்கொண்டு சென்றுள்ளதால் திரு. அநுரா பண்டாரநாயக்கா தற்காலிக எதிர்க்கட்சி பதில் தலைவராக செயற்படுவார் என்று சபாநாயகர் தெரிவித்தார்.

ஈரோஸ் குழுவைச் சேர்ந்த திரு. சிவமகாராசா பாராளுமன்ற அங்கத்தவர் பதவியை ராஜினுமா செய்துள்ளார் என்பதும் சபையில் அறிவிக்கப்பட்டது.

இதே வேளையில் மட்டக்களப்பு பாராளுமன்ற அங்கத்தவர் திரு. சாம் தம்பிமுத்து மரணம் குறித்தும்சபாநாயகர் தமது ஆழ்ந்த கவலையை சபையில் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட சபை நடவடிக்கைகளின் போது பெருந்தோட்டத்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன போதைவஸ்து கட்டுப்பாட்டு திருத்த சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

சபையில்விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதம கொறடா எஸ். எவ். பத்திரான போதைவஸ்து கடத்தல் காரர்கள் மீது அரசு இரக்கம் காட்டக்கூடாது என்றும் போதைவஸ்து விநியோகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஜனப் ஹலீம் இஸாக்: நாட்டில் போதைவஸ்துக்கு அடிமையாகி இருக்கும் இளைஞர்கள் தொகை நாளுக்குநாள்பெருகிவருகிறது என்றும் இதனுல் பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவர்களுக்கென ஒரு வைத்தியசாலையும், புனர்வாழ்வு அளிக்கும் நிலையங்களையும் ஆரம்பித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும் என்றும் கூறினர்.

கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி உரையாற்றுகையில்; எந்த ஒரு நாட்டிலும் திறந்த பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்பட்டாலும், அதன் வாயிலாக போதை வஸ்துக்கள் இறக்குமதி செய்யப்படுவதில்லை. அதற்கு திறந்த பொருளாதாரக்கொள்கையை குறைகூற முடியாது. இந்தநாட்டில் 30,000 இளைஞர்கள் வரையில் போதைவஸ்துக்கு அடிமையாகவுள்ளனர். இதற்கு அரசாங்கத்தைக் குறைகூற முடியாது. அரசாங்கம்ஒருபோதும் போதைவஸ்து பாவனையை ஊக்குவிக்க இடமளிக்காது என்ருர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த திரு. பெர்ணுண்டோபிள்ளை உரையாற்றுகையில்: இந்த அரசாங்கத்தின் காலத்தில்தான்போதைவஸ்து கடத்தல் ஊக்குவிக்கப்பட்டது என்றும், போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டுள்ள பெரும் புள்ளிகளை கைவிட்டு போதைவஸ்துக்களை பாவிக்கும் ஏழைகளும், அப்பாவிகளும் தண்டிக்கப்படுகிருர்கள் என்றும் கூறினுர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த மங்கள சமரவீர பேசும்போது, போதைவஸ்துக்கு அடிமையான சுமார் 40, 000 இளைஞர்களினுல், லட்சக்கணக்கான பணம் ஒரே நாளில் செலவழிக்கப்படுகிறது என்றும் போதைவஸ்து பாவனையை தடுப்பதற்கு ஜனுதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர் ஆனந்த தஸநாயக்கா உரையாற்றுகையில்: துப்பாக்கியால் முடியாததை சாதிக்கக்கூடிய வலிமை போதைவஸ்துக்குண்டு. அரசாங்கம் போதைவஸ்துக் கடத்தலைத் தடுக்க எடுத்தநடவடிக்கை போதாது என்ருர்.

விவாதத்துக்கு பதிலளித்த பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பேசுகையில் கூறியதாவது:

இப் போதைவஸ்துக் கடத்தலுககு ஐக்கிய தேசியக் கட்சியை மட்டும் குற்றம் சாட்டுவது பொருத்தம் அற்றது.

இப்பயங்கர போதைவஸ்துக்கு அடிமையாக இந்நாட்டில் 40,000 பேர் உள்ளனர். இக்கடத்தலில் எயர்-லங்கா, குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் சிலரும், சம்பந்தப்பட்டுள்ளனர் என்று எனக்குத்தெரிய வந்துள்ளது இதனை ஒழித்துக்கட்ட உடன் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் உறுதியளித்தார். (அ)

## தனியார் போக்குவரத்துச் சேவை: 4,000 பஸ்கள் இறக்குமதி

(கொழும்பு)

தனியார் போக்குவரத்துச் சேவைக்கென சுமார் 4000 பஸ்களை இறக்குமதிசெய்வதற்கான கட்டளைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. விஜயபால மென்டிஸ் நேற்று பாரளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனுதிபதி ஆர்.பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில், பஸ்வண்டி உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்கென 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது, என்றும் அதனையடுத்து உதிரிப்பாகங்கள் இறக்குமதிசெய்யப்பட்டுவருகின்றன. என்றும், இரண்டுமாத காலஎல்லைக்குள் பஸ் போக்குவரத்து சேவை. சீரான நிலைக்குக் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் மென்டிஸ் சபையில் உறுதியளித்தார். (அ)

## முக்கிய பிரச்சனைகள் குறித்து சர்வகட்சிமாநாடு ஆராய்ந்தது

(கொழும்பு)

''நாட்டு மக்களுக்கு உரித்தான நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான சமத்துவம், வேலைசெய்யும் உரிமை, இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லவும் திரும்பி வரவுமுள்ள சுதந்திரம் என்பன தொடர்பான பிரச்னைகள் குறித்து சர்வகட்சி மாநாடு தொடர்ந்து கலந்துரையாடல் நடாத்தும்.''

ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் ஜனுதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழுவின் கூட்டத்தில் மேற்படி முடிவு ஏற்பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டில் கலந்துரையாடல் முக்கிய பங்கினை வகித்துவந்த ஜனுப் ஏ. அஸீஸின் ஞாபகார்த்தமாக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

அடிப்படை உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் தொடர்பான 15வது உறுப்புரைக்கு தெரிவிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கருத்துக்கள் பிரதிநிதிகள் குழுமுன் வைக்கப்பட்டது.

கலந்துரையாடலில் அரசாங்க குழுவின் சார்பில் நீதியமைச்சர் ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீதும் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மென்டிஸ், கலாசார அலுவல்கள் அமைச்சர் டபிள்யூ. ஜே. லொக்குபண்டாரா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் திரு. பிரட்மன் வீரக்கோன், சட்டமா அதிபர் திரு. சுனில் டி சில்வா ஆகியோர் கலந்துரையாடலில் துணைபுரிந்தனர்.

அகில இலங்கை முஸ்லிம் லீக், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முற்போக்கு சங்கம், தேசிய தொழிலாளர் சங்கம், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, இலங்கை தமிழரசுக்கட்சி, விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழீழ விடுதலை தாபனம், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், லிபரல் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி, ஐக்கியதேசியக்கட்சி ஆகிய அரசியற் கட்சிகளும் குழுக்களும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டன. [அ)

### ஆயுர்வேத

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளனர். முழு விபரங்களும் இம்மாதம் 4ந்திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. (71)

### பிறப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு ஒரு வழிதான் உண்டு. தற்பொழுது நாம் கையில் இருக்கும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை தனியாருடன் சேர்ந்து விநியோகம் செய்து, ஒரு சீரான நிலைக்கு அவசரமாக கொண்டுவர வேண்டும்.

இதற்கு போதிய நிதிவசதி வேண்டும், அதுதான் இப்பொழுது எம்மிடம் உள்ள பிரச்சனையாகும் என்ருர். (ம)

## அரசு-ஈ.பி.ஆர்.எல்.எவ்.பேச்சு ஜனுதிபதி செயலக அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துடனுன பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதற்குத் துணைபுரியும் வகையில் சர்வகட்சி மாநாட்டில் பங்கு பற்றுவது குறித்துத் தீவிரமாகவும், ஆக்கபூர்வாமகவும் சிந்திப்பதற்கு ஈ. பி. ஆர் எல். எவ். தூதுக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

அரச தூதுக் குழுவுக்கும், ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக் குழுவுக்குமிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சு வார்த்தையை அடுத்து ஜனுதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:

''1991ம் ஆண்டில் ஜனநாயக ஈழக் குடியரசைத் தாபிக்கும் பிரகடனம் ஒன்றைச் செய்யத் தூண்டிய துரதிர்ஷ்டவசமான சந்தர்ப்பத்தையும், காரணத்தையும் ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக் குழுவினர் பேச்சு வார்த்தையின்போது விளக்கிக் கூறினர்.

''ஐக்கிய இலங்கையில் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்ுத் தீர்வுகாண்பதற்குத் தாம் உறுதி பூண்டுள்ளதாகவும் தூதுக் குழுவினர் எடுத்துக் கூறினுர்கள்.

''ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினரால் முன்வைக்கப்பட்டுள்ள 18 படிவங்கள் அடங்கிய நிகழ்ச்சி நிரலை, கலந்தாலோசித்து பொது இணக்கத்திற்கு வரச் சர்வகட்சி மாநாடு மிகவும் பொருத்தமான மேடையாக இருக்குமெனப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன தூதுக் குழுவினர்க்குச் சுட்டிக் காட்டினுர்.

''வடக்கு-கிழக்கு சட்டம், ஒழுங்கு நிலைமை, வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகத்தின் நிச்சமயற்ற நிலைமை குறித்தும் தாங்கள் கவலை கொண்டுள்ளதாகவும், அப் பகுதிகளில் மீண்டும் அமைதி, ஜனநாயக ஆட்சியை உருவாக்கத் தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தூதுக்குழுவினர் பேச்சு வார்த்தையின்போது தெரிவித்துள்ளனர்.'' (அ)

## பொறியியலாளரை விழுங்கிய முதலை

(சிட்னி)

முதலை ஒன்று பொறியியலாளரை உயிரோடுவிழுங்கிய பரிதாப சம்பவம் வட அவுஸ்திரேலியாவிலுள்ள ஒதுக்குப்புற தீவில் நிகழ்ந்துள்ளது.

தொலைபேசி இணைப்புகளைத் திருத்தும் வேலைக்கென இத்தீவுக்கு வந்த ஒரு சில மணி நேரத்தில் இப் பொறியியலாளருக்கு இககதி நேர்ந்தது என்று அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதலைத் தோல் விற்பனை செய்யும் சட்டவிரோத செயலுடன் சம்பந்தப்பட்ட நபரை பொலிஸார் விசாரணைக்குட்படுத்திய வேளையில் இறந்த பொறியியலாளரின் அழுகிய சடலமும் முதலைகளுடன் இருக்க கண்டுபிடிக்கப்பட்டது.

அல்பெர்ட் ஜொஸெலஸ் ஹானுஸ் என்ல இப் பொறியியலாளர் கடைசியாக இத்தீவில் நடுநிசி நேரத்தில் உலாவியதை கண்டதாக பெண் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## ஜனசக்தி உதவி பெறுவோர் சிறு வேலைத்திட்டம்

(மானிப்பாய்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பகுதியில் அமைந்துள்ள கொழும்புதுறை கிராமசேவையாளர் பிரிவில் ஜனசக்திஉதவி பெறும் சுமார் 70 குடும்பங்களினுல் சிறிய வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஆண்கள் பெண்கள் உட்பட நடைபெற்ற இவ்வேலையில் அப்பகுதி கடற்கரை முழுவதும் துப்புரவாக்கப்பட்டது.

ஜனசக்திபெறுவோர் சம்பளமின்றி பொதுவேலைகளைச் செய்யவேண்டுமென்ற அரசின் பணிப்புக் கிணங்க மேற்படி வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (71)

கிளிநொச்சி கச்சேரியில்

## தமிழ் மொழி அமுல் பற்றி இன்று ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் அரசகரும மொழி அமுலாக்கல் திட்டத்தைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்வையிடுவதற்காக அரச கரும மொழி அமுலாக்கல் திணைக்கள ஆணையாளர் இன்று 17ம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்கின்ருர்.

இம் மாவட்டத்தில் அரச

(7-ம் பக்கம் பார்க்க)

# கோட்டக்கல்வி ஆலோசனை சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி ஆலோசனைசபை என்ற பெயரில் புதிய சபையொன்று எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியன்று அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விப் பிரிவில் கல்வி அபிவிருத்திபற்றி மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள்பற்றி இச்சபை கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு ஆலோசனைகளை வழங்குமென்று தெரிவிக்கப்படுகின்றது.

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை தொகுதிகளைச் சேர்ந்த கல்வி விற்பன்னர்கள், ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் இந்த ஆலோசனைசபை உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் இச்சபையின் அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியன்று நடைபெறவுள்ளதாகவும் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக உதவிப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (72)

## பத்து ஏற்களங்கள்

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பத்து ஏற்களங்கள் யாழ் மாவட்டத்தில் நல்லூர் கமநலசேவை நிலையத்தினர் நிறுவிக் கொண்டு வருகின்றார்கள். இதில் இமையாணன், உடுவில், அளவெட்டி, புத்தூர் ஆகிய பகுதிகளில் இதற்கான வேலைகள் முடிந்து விட்டன.

வேலணை, புங்குடுதீவு, நல்லூர், தொல்புரம், சாவகச்சேரி, கைதடி போன்ற இடங்களிலும் ஏற்களம் அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (152)

## கூட்டுறவு ஊழியர் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பண்டத்தரிப்புக் கிளையின் வருடாந்தப்பொதுக் இம்மாதம் 26ம் திகதி சனிக் கிழமை பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க மின்தறியாலை கட்டிடத்தில் நடைபெறவுள்ளது. சங்க உப தலைவர் திரு. து. முருகேசு தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். இதற்கான ஒழுங்குகளை சங்க கிளையின் செயலாளர் திரு. சி. மகேந்திரன் செய்துள்ளார். (72)

## கணக்காளர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் திணைக்கள யாழ். பிரதேசக் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. சு. சிவபாலன். யாழ். செயலகத்தின் இளைப்பாற்றுப் பிரிவுக்கும், கொழும்பு தலைமை அஞ்சலகத்தின் கணக்குப் பதிவுக் கிளையில் பணியாற்றிய கணக்காளர் திருமதி என். பாலேசன் யாழ். பிராந்திய அஞ்சல் திணைக்களத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.


திரு. சு. சிவபாலன், மிக அண்மையில் முதலாந்தரக் கணக்காளர் சேவையில் பதவி உயர்வு பெற்றுரென்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகளுக்கு நிவாரணம்

(பண்டத்தரிப்பு)

வன்செயல்களின்போது உற்பத்திகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணப் பணம் 4000 ரூபா வழங்கும் திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த விவசாயிகளுக்கு கடந்த சனிக் கிழமை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியில் 4000 ரூபா நிவாரணப் பணம் வழங்கப்பட்டது. (72)

## நினைவில் நிற்பவர்



அராலியூரைச் சேர்ந்த அம்பலவாணர் பொன்னம்பலம் அண்மையில் காலமானுர்.

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியிற் பயின்றவர். தகப்பனுர் சிறப்பாகச் செய்த விதானையார் பதவி இவருக்குக்கிடைத்தது.

இருபது ஆண்டுகள் விதானையார் பதவியை வகித்தவர். ஊர் மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றவர். சிறு வயதிலேயே தாயாரை இழந்தபடியாற் குடும்பச்சுமை வந்தது. யாழ். இந்துக் கல்லூரி விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகவிருந்த சரவணமுத்து, பிரபல பொதுவுடமைவாதி வைத்திலிங்கம் ஆகிய இளவல்களையும் வளர்த்தெடுக்கும் பணியும் இவருடையதாயிற்று. எனினும் குடும்பப் பொறுப்புக்களோடு சமூகப் பணியில் எவ்வளவும் குறை ஏற்பட இடமளிக்கவில்லை.

இவரது ஒரே மகன் சிவசிதம்பரத்தைப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுத்தினுர். 'ஈழநாடு'வில் நீண்டகாலமாகப் பணிபுரிய வைத்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரை சமூகம் என்றும் நினைவில் வைத்திருக்கும்.

- சிவா

# "விடுதலைப் போராட்டம் பற்றி சிங்கள பொது அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம்" - ராஜன்

(யாழ்ப்பாணம்)

"நாம் இன்று அரசியல் ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக உங்கள் முன் நிற்கிறோம். எமது இயக்கம் விடுதலைப் போராட்ட லட்சியத்தில் உலக ரீதியில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது லட்சியம், கொள்கைகளை விற்றுச் செயற்படக் கூடாது. எமது விடுதலைப் போராட்டம் பற்றிச் சிங்களப் பகுதியிலுள்ள அனைத்துப் பொது அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டுள்ளோம்.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாஜ வருடாந்த பொதுக்கூட்டத்தில் யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் அமைப்பாளர் திரு: ராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது: எமது லட்சியத்தை விட்டுக் கொடுக்காமல் எமது உண்மையான லட்சியத்தைப் புரிந்து இயங்கவேண்டும். புதிய தலைமுறையைஉருவாக்கிச் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த மண்ணின் மைந்தர்களாக உண்மையில் செயற்பட வேண்டும்."

கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய சமாசத்தலைவரும், இளைப்பாறிய கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளருமான திரு. ச. ஞானப்பிரகாசம் கூறியதாவது;

மக்களிடம் சேமிப்புப்பழக்கம் ஏற்படவேண்டும். இதன் மூலமே எமது தேவைக்குப் பிறரை நம்பியிராது சுயமாக வாழமுடியும். சமுதாய முன்னேற்றத்திற்கு மகளிர் பங்கு அவசியம். இக்கூட்டுறவு அமைப்பில் மகளிர் பெரும் பங்களிப்புச் செய்து வருவது பாராட்டிற்குரியது. மிகவும் பழமை வாய்ந்த இக்கூட்டுறவுச்சங்க முறை யாழ். மாவட்டத்தில் முன் மாதிரியாக விளங்குகின்றது.''

இக்கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. செ. இ. நித்தியராஜ், தலைமைக் காரியாலயக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். கணேசலிங்கம், சமாச மாவட்டச் செயலாளர் திரு. த. நந்தகுமார் உட்பட வேறு பலரும் பேசினர். (54)

# "போராளிகளின் பெற்றோரையும் பாராட்டும் பண்பு தமிழ்மக்களுக்கே உரியது"

(வடமராட்சி)

"போராளியின் மறைவுடன் அவரது சேவையை நிறைவுசெய்யாமல் அவரது பெற்றோரையும் இனம்கண்டு பாராட்டும் பண்பு தமிழ்ஈழ மக்களுக்கே சொந்தமானது"

தியாக வேங்கைகளின் நினைவாக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தாரின் 7-வது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் திக்கமுனையில் நடைபெற்றபோது மேற்படி கருத்தினை திரு. காந்திதாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஓலைக் குடிசையிலோ ஓட்டுக் குடிசையிலோ இருந்து உருவாகும் ஒவ்வொரு போராளிகளும் அவர்களின் குடும்பத்தவர்களுக்குத் தலைவர்களே. அதேபோல் அவ்வீர வேங்கைகளையும் ஈன்று நாட்டுக்காகத் தியாகம்செய்த பெற்றோர்களும் பாராட்டத்தக்க பெருமையும் சிறப்புமுடையவர்களே என்றார்.

விளையாட்டுப் போட்டியினை வடமராட்சி தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பொறுப்பாளர் திரு. சூசை ஆரம்பித்து வைத்தார்.

ஆண்டுவிழா மேற்படி சங்க தலைவர் திரு.என். இளங்கோ தலைமையில் நடைபெற்றது.

இதில் முன்னுள் தலைவர் திரு. ஆர். சிவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கொடியேற்றுவித்தார். மேலும் யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். ஏகாம்பரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

வெற்றிபெற்றவர்களுக்கு மறைந்த காப்டன் கந்தனின் தாயாரும் காப்டன் லாலாவின் (ரஞ்சன்) தந்தையும் பரிசில்களை வழங்கினர். (51)

# இறைவனை துதிப்போமானுல் தீவினைகள் யாவும் அகலும்

(தென்மராட்சி)

"சமய குரவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தேவார திருவாசகங்களான அருள் நெறிப்பாடல்களை மனம் உருகப்பாடி இறைவனைத்துதிப் போமானுல் நம்மைப் பீடித்துள்ள தீவினைகள் யாவும் நீங்கிவிடும்.

மந்துவில் முருகன் ஆலயத்தில் சித்திரா பூரணையை முன்னிட்டு நடைபெற்ற சைவ சமயப் பிரசாரக்கூட்டத்தில் சுரசாலை இந்து இளைஞர் மன்றக்காப்பாளரான டாக்டர் ச. நமசிவாயம் இவ்வாறு கூறினுர்.

ஆலய பரிபாலகருள் ஒருவரான ஸ்ரீ நடராசா சுவாமி தலைமையில் மேலும் டாக்டர் நமசிவாயம் பேசும் போது கூறியதாவது; சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர்கிராமந்தோறும் சைவசமயப் பிரசாரம் செய்து வருகின்றனர், கூட்டுப் பிரார்த்தனையும் நடத்தி வருகின்றனர். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலையால் இடைநிறுத்தம் செய்யப்பட்டும்மீண்டும் சித்திரைப்பூரணை புனித நன்னுளில் செயற்படுவது நல்லதோர் அறிகுறி.

வெள்ளி தோறும் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறவேண்டும். 'எமது பூரணஒத்துழைப்பு வழங்கப்படும்.

திரு. குமாரலிங்கம் இந்து இளைஞர் மன்றத்தலைவர் திரு. கு. ஞானேஸ்வரன் உட்பட மற்றும் சிலர் உரை நிகழ்த்தினர். (81)

## மண்வெட்டி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கமநலச்சேவை நிலையத்தார் 860 முதலைமார்க் யாழ்.ரக லங்கா லோக தயாரிப்பு மண்வெட்டிகளை கொழும்பிலிருந்து தருவிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இன்னும் இரண்டொரு கிழமைகளில் வந்து சேரும் இந்த மண்வெட்டிகள் யாழ் மாவட்டத்தில் உள்ள கமநலச் சேவை நிலையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம்செய்யப்படும்என அறியப்படுகிறது. [152)

# முருகண்டி பிரதேசத்தில் மதுபான, மாமிச, விற்பனையை தடைசெய்யக் கோரிக்கை

(நமது கிளிநொச்சி நிருபர்)

முருகண்டி புனித பிரதேசத்தில் இறைச்சி, மீன், சாராயம் விற்பனவுசெய்யப்படுவதாகவும் இதை தடைசெய்ய வேண்டும் எனவும் முருகண்டி அருள்மிகு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை சார்பிலும் முருகண்டி சிற்றூர் அவை சார்பிலும் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முருகண்டி பிள்ளையார் ஆலய புனித பிரதேசத்தில் புனித தன்மைக்கு ஊறுவிளைவிக்க முற்படவேண்டாம் எனவும் கிளிநொச்சி நகர் இந்து இளைஞர் மன்றமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடகிழக்கு மாகாண மக்களுக்கு முருகண்டியிலிருந்து காலா காலமாக அருள் பாலித்துவரும் பிள்ளையார் ஆலயம் தற்போது திரு. சாமி தலைமையில் பரிபாலன சபை ஒன்று அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது: இந்த நிர்வாகம் அமைக்கப்படுவதற்கு முன் தனி மனித நிர்வாகம் இங்கு இருந்தது. (83)

# மிதிவெடியில் காலையிழந்தார்

[யாழ்ப்பாணம்]

மிதிவெடி ஒன்று வெடித்ததில் ஒருவர் வலதுகாலைஇழந்து படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் இடம்பெற்ற இவ் வெடிவிபத்துச் சம்பவத்தில், செம்மலையைச் சேர்ந்த வில்லியம் கதிரவேலு [வயது 58] என்பவரே படுகாயமடைந்தவராவார்.

செம்மலையிலிருந்து நாயாற்றுப்பகுதியில் வயல்கரையில் புற்றுக்குள் கிடந்த மிதிவெடியொன்று தமது காலில் சிக்குண்டு திடீரென வெடித்ததாக காயமடைந்தவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர் உடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். [56]

## தென்பகுதிக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மையில் மேற்கொண்டனர்.

ஆண்டு 11-ல் கற்கும் 40 மாணவிகள், 8 ஆசிரியர்கள் 2 பெற்றோர்கள் ஆகியோரைக் கொண்ட இக்குழுவினர் இச் சுற்றுலாவை மேற்கொண்டனர்,

இக்குழுவினர் மிகிந்தலை, சிகிரியா, கண்டி தலதா மாளிகை, பேராதனைப் பூங்கா பேராதனைப் பல்கலைக்கழகம், விக்ரோறியா நீர்த்தேக்கம், டியலம நீர்வீழ்ச்சி, லக்கல தாவர பூங்கா, நுவரெலியா தேயிலைத் தொழிற்சாலை, கதிர்காம கந்தன் ஆலயம், செல்லக் கதிர்காமம், கொழும்பு நூதன சாலை, தெஹிவலை மிருகக் காட்சிச்சாலை, நீர்கொழும்பு, பீங்கான் தொழிற்சாலை ஆகியவை உட்பட மற்றும் பல்வேறு சரித்திர, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை நேரடியாகப் பார்வையிட்ட பின்பு கடந்தவாரம் திரும்பியுள்ளனர். [72]

# "சமுதாயத்தின் சீரழிவுகளை மறுசீரமைக்க வேண்டும்"

## — ஆஞ்சநேயர்

(உடுவில்)

''உடலுறுதி, மனவலுமை, விட்டுக்கொடுக்கும் பண்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் இவை தான் விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளமாக அமையும் ஏணிப்படிகளாகும்''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் கூறினார்.

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி விளையாட்டுக் கழகத்தின் 24-வது விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரு. ஆஞ்சநேயர் மேலும் கூறியதாவது:

''நமது சமுதாயத்தில் பல சீரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இதனை மறுசீரமைக்கும் பாரிய பொறுப்பு இளம் தலைமுறைக் குண்டு. இளம் தலைமுறையினர் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதுடன் கட்டுப்பாடு, நேர்மை, கண்ணியம், சகிப்புத்தன்மை போன்றவற்றைக் கடைப்பிடித்து மன உறுதிபெறவேண்டும் நலிவுற்றிருக்கும் எம் இனத்துக்கும் அதன் கலாசாரம், விளையாட்டு போன்றவற்றுக்கு புத்துயிர் ஊட்டி எழுச்சியடையச் செய்வதற்கு சனசமூக நிலையங்கள் போன்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும்''

ஜனசக்தி சனசமூக நிலையத்தின் தலைவர் திரு. வே. தம்பிரெத்தினம் தலைமையில் விழா நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு உடுவில் பிரிவு உதவி அரசாங்க அதிபரும் வலிகாமம் தெற்கு அபிவிருத்திச்சபையின் விசேட ஆணையாளருமான திரு. ஆ. மகாலிங்கம் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்.

திரு. மகாலிங்கம் தமதுரையில்: ''விளையாட்டுப்போட்டிகள் நமக்கு நல்லறிவையும் பண்பாடுகளையும் கற்றுத்தருவனவாக அமையவேண்டும். வெவ்வேறு பிரிவுகளாக நடைபெற்றுவந்த இந்நிலையத்தின் விளையாட்டுப்போட்டிகள் இம்முறை ஒருங்கிணைந்தவகையில் நடைபெற்றுள்ளமை பாராட்டுக்குரியது. அத்துடன் இப்போட்டிகள் மேலும் கட்டுக்கோப்புடன் விளங்கியமையும் குறிப்பிடவேண்டும். எதிர்காலத்தில் இந்நிலயம் இது போன்று செயற்பட்டு, வளர்ச்சியுறும் வேளையில் என்னால் முடிந்த அரசாங்க உதவிகளை நிச்சயமாகப் பெற்றுத்தருவேன்''என்றார்.

போட்டிகளில் முதலாவதாக வெற்றியீட்டிய பிரிவுக்கு மறைந்த போராளி விக்ரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் வலிகாமம் பொறுப்பாளர் கிளியினால் இக்கிண்ணம் வழங்கப்பட்டது

தமிழீழ விடுதலைப்புலிகளின் சுன்னாகம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சிவா, மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். துரைசிங்கம், சுன்னாகம்கிழக்கு கிராமசேவை உத்தியோகத்தர் திரு. எம். இராமலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட எம். பி. திரு. க. செல்வநாயகம் உட்பட பலரும் விழாவில் கலந்துகொண்டனர். [109]

## இடமாற்றம்

(உடுவில்)

இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகப் பல ஆண்டுகள் கடமையாற்றிய திரு. எஸ். சோதிப்பெருமாள் இம் மாதம் 15-ம் திகதி முதல் இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலய அதிபர் திரு, கே. பேரம்பலம் புங்குடுதீவு கொத்தணி அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்.

இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன்பாடசாலை உப அதிபர் திரு. எஸ். செல்வநாயகம் அப் பாடசாலையின் புதிய அதிபராகச் செயற்படுவார். (109)

0 0

(உடுவில்)

வேலணை கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. எஸ். இரட்ணராஜா இம் மாதம் 15-ம் திகதி முதல் மருதனுமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தின் திட்டமிடல் பிரிவுக் கல்வி அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் புதிதாக அமைக்கப்பட்ட ஆறுவது கோட்டமான சாவகச்சேரிக் கோட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (109)

## இராசி பலன்

வியாழக்கிழமை
17 - 05 - 1990

மேடம்: வீண்பழி, வைத்தியம், புதியதிட்டம், தொழிற் சிந்தை.

இடபம்: வேதாந்தம் பேசுதல், அசதி, பொய்சொல்லல், வீண்பொழுது.

மிதுனம்: ஆலய தரிசனம், பொய் பேசுதல், இடமாற்றம், அலைச்சல்.

கடகம்: நன்முயற்சி, புகழ், ஆடம்பரம், வாகன சுகம்.

சிங்கம்: வசீகரம், சமூக சேவை, பெரியவர்கள் உதவி, புதிய ஒப்பந்தம்.

கன்னி: படித்தவர்கள் வருகை, பொருட் சிந்தை, அலைச்சல், செலவு.

துலாம்: சங்கீதம், ஆடம்பரம், செல்வாக்கு, அமைதியின்மை.

விருச்சிகம்: சமூக சேவை, புதிய திட்டம், பணவரவு, வீண் செலவு.

தனுசு: ஆடம்பரம், அரசியல் தர்க்கம், உறவினர் உதவி, செலவு.

மகரம்: சுபச் செய்திகள், தடை, போசன சுகம், மகிழ்ச்சி.

கும்பம்: தொந்தரவு, காரிய தாமதம், செல்வாக்கு, பணவரவு.

மீனம்: ஆலயச் செலவு, வீண் யோசனை, தூரத்துச் செய்தி, கனவு.

இ. மகாதேவா

# "மனித சக்தி மூலம் சிறந்த பயன் பெறுவோம்"

(யாழ்ப்பாணம்)

''மனிதரிடம் எவ்வளவோ திறமைகள் உள்ளன, மனித சக்தியைத் தகுந்தமுறையில் பயன்படுத்துவதின் மூலம் சிறந்த பயன்களை அடைய முடியும். 'ஜனசக்தி' மூலம் மக்கள் சுபீட்சமடைவதுடன் வறிய மக்களின் வாழ்வு சுபீட்சமடைய செயற்படவேண்டும்''.

இவ்வாறு யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தை அங்குரார்ப்பணம்செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''கிராமிய மட்டத்தில் நாம் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்க உத்தியோகத்தர்கள் பொதுமக்களுடன் சேர்ந்து கிராமிய முன்னேற்றத்திற்கும் மக்களுக்கும் உதவி வருவது பாராட்டிற்குரியது. கடல் தொழிற் பயிற்சிக் கல்லூரியை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது'' என்றார்.

மாதர் சங்கத் தலைவி செல்வி பிரான்சிஸ் சேவியர் லில்லி றீட்டா தலைமையில் இக் கூட்டம்நடைபெற்றது. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரு. இராஜராஜேஸ்வரன், திரு. பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சம்மேளன நிர்வாகச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா, திரு. செபஸ்ரியாம்பிள்ளை, திரு. சுந்தரலிங்கம், திரு. ஆ. மார்ட்டின் ஆகியொரும் பேசினர். (54)

## வீட்டுத் தோட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக வீட்டுத்தோட்ட போட்டிகளில் 1989ம் ஆண்டு குறைந்த அளவில் மக்கள் பங்குபற்றினர்கள். இவர்களின் பங்களிப்பை கருத்தில் கொண்டு நல்லூர் கமநலச் சேவை நிலையம் போட்டிகளில் பங்குபற்றிய ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அவர்களது ஒத்துழைப்பை கௌரவித்துக் கடிதங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

1989ம் ஆண்டு வீட்டுத் தோட்டப் போட்டி நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## கிளிநொச்சி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கரும மொழி அமுலாக்கல்சட்டத்தில் கீழ் தமிழ்மொழியில் கருமங்கள் எவ்விதம் ஆற்றப்படுகின்றன என்பது பற்றி ஆராய்வார்.

நாட்டில் அரச கருமமொழி அமுலாக்கல் நடைமுறைப் படுத்தப்படுவது பற்றிய நிலைமைகளை விளக்கும் அறிக்கைகைகளைத் தயாரிக்கும் முகமாக அரச கரும மொழி அமுலாக்கல் திணைக்கள ஆணையாளர் சகல மாகாணங்கள், மாவட்டங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு வருகின்றார்.

கிளிநொச்சிக் கச்சேரியில் இன்று காலை நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் ஆணையாளர் அரசகருமமொழி அமுலாக்கல் சம்பந்தமாக இம் மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளின் தலைவர்களுடனும், அதிகாரிகளுடனும் கலந்துரையாடுவார் என்று கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

அரச கரும மொழி அமுலாக்கல் சம்பந்தமான விபரங்கள் திரட்டும் முகமாக வினாக்கொத்து ஒன்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபன, சபை அலுவலகங்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (54)

# இப்படியும் நடக்கிறது

இந்தியாவின் 'விஞ்ஞான மேதை' என்று வர்ணிக்கப்பட்ட அமரர் ஜி. டி. நாயுடு பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

இவரது கண்டு பிடிப்புகள் எல்லாமே பிரபல்யம்வாய்ந்தவை மட்டுமல்ல; இவரது கண்டுபிடிப்புகள் இந்திய அரசாங்கத்துக்கே பெரும் சவாலாக அமைந்ததுமுண்டு.

ஒரு தடவை இவர் 'டிரான்சிஸ்டர்' வானொலியைக் கண்டுபிடித்திருந்தார். அதன் விலை இருபத்தைந்து ரூபாய் என்றும் அறிவித்திருந்தார். ஆனாலும் இந்திய அரசாங்கம் இந்த வானொலி விற்பனைக்குத் தடை விதித்துவிட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் கோயம்புத்தூர் (கோவை) சென்றிருந்த போது கோயம்புத்தூரிலுள்ள ஜி. டி. நாயுடு தொழில்நுட்ப நிறுவனத்தைச் சுற்றிப்பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. உள்ளே நுழைந்தால், எங்கும் எதிலும் சுத்தம் காணப்பட்டதுடன், பெரிய பெரிய மண்டபங்களில் நாயுடுவின் கண்டு பிடிப்புகளும் இடம் பெற்றிருந்தன. ஒரு மண்டபத்தின் நுழைவாயிலில் ஒரு அறிவித்தல் பலகை. அதில் பின்வருமாறு வாசகங்கள் இடம் பெற்றிருந்தன.

''குப்பைகளை அல்லது கடதாசிகளை இம்மண்டபத்தில் போட்டால், இந்த மண்டபம் முழுவதையும் நீங்கள் கூட்டிப் பெருக்கவேண்டும்.

''இம்மண்டபத்தில் எச்சிலை உமிழ்ந்தால், மண்டபம் முழுவதையும் நீங்கள் நீர்கொண்டு கழுவி, சுத்தப் படுத்தவேண்டும்.

''தெரிந்தோ, தெரியாமலோ இங்குள்ள ஒரு பொருளை அல்லது கருவியை நீங்கள் திருடினால் உங்கள் கரம் துண்டிக்கப்படும். அதற்குரிய நஷ்டஈடும் வழங்கப்படும்!''

வாசகங்களைப் படித்ததும் மெய்சிலிர்த்துவிட்டது!

இங்கும் பல இடங்களில் நாம் 'சுத்தம் சுகம்தரும்... திருடர்கள் கவனம்!' அறிவிப்புகளைப் பார்க்கின்றோம். ஆனாலும் ஜி. டி. நாயுடு தொழில்நுட்ப நிறுவனத்தின் துணிச்சல் மிகுந்த எச்சரிக்கை இங்கும் அமுலுக்குவருமா?

'ஊடுருவி'

# தொலைக்கல்வி பயிற்சி

(நாவற்குழி)

தொலைக்கல்விமூலம் பயிற்சி பெறும் ஆசிரியமாணவர்களுக்கான 'மொடியூல்ஸ்' கொழும்பிலிருந்து யாழ் வந்துசேர்ந்து விட்டதாகவும் 89-91 கல்வி ஆண்டிற்கான பயிற்சி ஆசிரியர்கள் தங்களுக்குரிய 'மொடியூல்ஸ்' களை நாளை 18ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள தொலைக்கல்விப் பிரிவின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ். தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார். (107)

## கருத்தரங்கு

(புலோலி)

'அபிவிருத்தியில் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு' என்னும் தலைப்பிலான கருத்தரங்கொன்று இம் மாதம் 23-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் இக் கருத்தரங்கு நடைபெறும். (61)

## மாணவர்களுக்கு ஒழுக்கம் முக்கியம்

(நாவற்குழி)

''தமிழ் மொழியை வளம் படுத்தக்கூடிய ஆற்றல்களை இன்றைய மாணவர்கள் பெற்றுள்ளார்கள். அந்த ஆற்றல்களை மாணவர்கள் வளர்க்கக் கூடிய இடம் பாடசாலையாகும்.'' என்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கோட்டக் கல்வி அலுவலகக் கல்வியதிகாரி திரு. த. துரைசிங்கம் குறிப்பிட்டார்.

கல்லூரியின் தமிழ் மன்றக் காப்பாளர் திரு த. சிதம்பரநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் பேசுகையில், ''ஒருவனது வாழ்வு சிறக்க வேண்டுமாயின் அவனுடைய ஒழுக்கம் சிறப்பானதாக இருக்கவேண்டும். அவ்வொழுக்கம் பாடசாலை மாணவ மட்டத்தில் தான் வளரவேண்டும்.'' என்றார்.

கல்லூரி மாணவரின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா முடிவுற்றது. (107)

## ஆங்கில தினம்

(நாவற்குழி)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆங்கில தினம் நாளை 18ந் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப் படவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. வீ. கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கல்வியதிகாரி திரு. எஸ். வீ. மகேசவேலு பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி வடக்கு கொத்தணி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள். (107)

## வெங்காயம் விலை அதிகரிப்பு

(கொக்குவில்)

திருநெல்வேலிச் சந்தையிலும் தனியார் விற்பனை நிலையங்களிலும் வெங்காயம் ஒரு கிலோ 42 ரூபா முதல் 44 ரூபா வரை விற்பனையாகின்றது.

அதுபோல் மரக்கறி விலையும் சற்று அதிகரித்துள்ளது. அரிசி மட்டும் விலை சரிந்துள்ளது. (138)


ஹரன்
வெண்திரையில்!
பி. ப. 4-00, 6-45. 9 30
நாளை முதல்
ஜெய்சங்கர்-K.R.விஜயா
நாகேஸ் சுருளி
நடித்த
திருடி

# “தமிழன் ஆயுதமேந்திபோராடமுடியும் என்பதை நிரூபித்தவர்கள் புலிகள்”

## - மகளிர் பிரிவு அமுதினி கருத்து

(நாவற்குழி)

‘தமிழன் ஆயுதம் ஏந்திப் போராட முடியாது என்ற கருத்து நிலவிய காலம் ஒன்று இருந்தது. ஆனல் இதற்கு எதிர்மாருக தமிழனும் ஆயுதம் ஏந்திப் போராட முடியும் என்று நிருபித்துக் காட்டியது எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாகும்’’

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தென்மராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி அமுதினி மீசாலையில் இடம்பெற்ற வீர வேங்கை கில்மனின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:

‘இலங்கை இராணுவத்தின் வைராக்கியத்தை மில்லரும், இந்திய இராணுவத்தின் வைராக்கியத்தை புலீபனும் நிலைகுலையச் செய்தார்கள். இன. மத ரீதியான வேறுபாடுகளை விடுத்து கடந்த பதினெட்டு ஆண்டுகள் நடாத்திய போராட்டத்தில் ஆறு வருடங்களே பெண்கள் போராட்டம் நடைபெற்றுள்ளது இது மிகவும் வெட்கக்கேடானது. அனைத்து பெண்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். பெண் விடுதலை என்ருல் அது ஆண்களுக்கு எதிரானது அல்ல அது சமுகத்திற்கு செய்யும் தொண்டு.

இன்று எமது பலத்தை மையமாகக் கொண்டே இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடாத்துகிறது’ என்ருர்.

## சிகிரியா கொள்ளை: பாதுகாப்புப் படையினரால் 114 பேர் சுற்றிவளைப்பு!

(கொழும்பு)

சிகிரியா உல்லாசப் பயண ஹோட்டலில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக ஆயுதப் படையினர் சிகிரியாப்பகுதியில் 114 பேரைச் சுற்றி வளைத்தனர்.

சம்பந்தப்பட்ட கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இவர்களுள் மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் சிகிரியா ஹோட்டலில் 10 லட்சம் ரூபா உல்லாசப் பிரயாணிகளிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்டது தெரிந்ததே.

சுமார் ஆயிரம் பாதுகாப்புப் படையினர் இந்தத் தேடுதல் வேட்டையில் இறங்கினுர்கள் என்றும் 400 கிராமங்களில் தேடுதல் நடைபெற்றதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தேடுதல் வேட்டை நேற்றுமுன்தினம்கூட நடைபெற்றது. (153)

### யாழ். கடவுச்சிட்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செயலகத்தில் திறந்து வைக்கப்பட்ட இந்த அலுவலகம் நேற்றுடன் ஒரு மாதத்தை பூர்த்தி செய்திருக்கிறது. இக்கால எல்லைக்குள் நடைபெற்ற 18 வேலைநாட்களில் 403 விண்ணப்பங்களும் விண்ணப்பதாரர்களால் கையளிக்கப்பட்டுள்ளன,

இவற்றில் 300 விண்ணப்பங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் 103 விண்ணப்பங்கள் சர்வதேச நாடுகளுக்குரியவையாகும். இதுவரை 295 விண்ணப்பங்கள்கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன இவை ஒவ்வொரு வாரமும் வெள்ளிசகிழமைகளில் இங்கிருந்து அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

### நயினை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான பனை அல்லது தென்னை மரங்கள் கிடையாமையினுல் திருத்தவேலை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது என்று தெரியவருகிறது.

இறங்குதுறை மேடையில் சில இடங்களில் மூன்று அடி அகலம் கொண்ட பாதை மாத்திரமே காணப்படுகின்றது.

நயினுதீவு நாகபூசணி அம்மன் திருவிழா அடுத்தமாதம் 23-ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் அதற்கிடையில் இந்த இறங்குதுறைமேடை திருத்தப்பட வேண்டும்.

இந்த திருத்த வேலைக்கு ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டும் இன்னும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இறங்குதுறையில் [illegible] வள்ளத்தை அணைக்கத் தடையாக சல், மணல் ஆகியவை உள்ளது. இவற்றை உடனே அகற்ற வேண்டும். (153)

### திருமதி கலா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த திருமதி கலா தம்பிமுத்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

47 வயதான இவர் நுரையீரலில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காரணமாக சுவாசக் கோளாறுகளால் பீடிக்கப்பட்டிருந்தார்.

காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளுக்கு அருண் என்ற ஒரே ஒரு மகன் மாத்திரம் இருப்பது குறிப்பிடத்தக்கது (து)

### போராளிகள்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

றும் மு. கருணுநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களுடன் பேசிய முதலமைச்சர் எந்தப் போராளிக் குழுக்களாக இருந்தாலும் தமிழ்நாட்டில் அவர்களுடைய வன்முறைச் செயல்களுக்கு இடமில்லை என்று தான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினுர்.

போராளிகள் வன்முறையில் ஈடுபட்டால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதனை இறுதி எச்சரிக்கையாக அவர்களுக்கு இப்போது தான் தெரிவித்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

அகதிகளாக வந்த எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறிய முதலமைச்சர் அவர்களில் போராளிகளாக இருந்த சுமார் 200 பேர் மாத்திரமே கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறினுர். (153)

### நிவாரணக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கிராமசேவையாளர்கள் பிரிவுகளிலுள்ளவர்களுக்கு நாளைமறுதினம் 19-ம் திகதி சனிக்கிழமை ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

பண்டத்தரிப்பு, மாதகல், சண்டிலிப்பாய், மானிப்பாய், சுதுமலை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்குக் குறிக்கப்பட்ட திகதியில் நாலாயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுகள் யாவும் இலங்கை வங்கி மானிப்பாய் கிளையினுல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வழங்கப்படும். [து]

### காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் தபால் எஞ்சினே தொடர்ந்தும் காலை யாழ். தேவி ரயிலுக்கு பாவிக்கப்படுவது வழக்கம். தபால் ரயில் தாமதமாக வந்தால் யாழ். தேவி ரயிலும் தாமதமாகப் புறப்படும். நேற்றுக்கூட மூன்று மணித்தியால தாமதம் ஏற்பட்டது. காலை யாழ். தேவி 10 மணிக்கு புறப்பட்டது.

காங்கேசன்துறை ரயில்வே எஞ்சின் பராமரிப்பு நிலையத்தில ரயில் எஞ்சினை பரிசோதனை செய்வதற்கும், எரிபொருள் நிரப்புவதற்கும் நேரம் ஒதுக்க வேண்டி இருப்பதனுல் தினமும் காலையில் ரயில் தாமதிப்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

1983-ம் ஆண்டு ஜுலை மாதத்திற்கு முன்பு வடபகுதிக்கு சுமுகமாக ரயில்வே சேவை நடந்து கொண்டிருந்த போது தனித்தனி ரயில் எஞ்சின்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன, இதனுல் சுழற்சியான முறையில் என்ஜின்கள் சேவையில் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இப்போது திருப்திகரமான சேவை நடைபெறுவதற்கு ஒரு ரயில் எஞ்சின் காங்கேசன்துறை ரயில் எஞ்சின் பராமரிப்பு நிலையத்துக்கு உடனடியாக தேவை என்ருர். (153)

பகவான் சாய்யின் வழியை ஊக்குவித்த

## ஞானசேகரம் ஐயாவின் அமரத்துவம்

16-05-1990 புதன்கிழமை காலை எங்கள் குரு ஞானசேகரம் ஐயா அவர்கள் அமரத்துவம் எய்தியுள்ளார். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அச்சக ஒழுங்கை,
கொக்குவில். சாயி அடியார்கள்.

(சி-3863)

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## ஆட்டைத் திருடியவர்கள் ஆளையும் சுட்டார்கள்!

(யாழ்ப்பாணம்)

திருட்டு போன ஆட்டைத் தேடிச்சென்ற ஒருவர் திருடர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

கடந்த 12-ம் திகதி மடுரோட் கணேசபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோவிந்தன் இராசலிங்கம் (வயது 28) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:- சம்பவதினம் இரவு 7-30 மணியளவில் ஆட்டுப்பட்டிக்குள் சத்தம் கேட்டதை அடுத்துக் காயமடைந்தவர் அங்குசென்று பார்த்த போது ஒரு ஆடு குறைவாக இருப்பதைக்கண்டு அவ் ஆட்டைத்தேடி பக்கத்திலுள்ள பற்றைக்காட்டிற்குள் சென்ற போது பற்றைக்குள் இருந்து வெளியே நீண்ட துப்பாக்கியின் குழலை எட்டிப்பிடித்த போது திடீரென துப்பாக்கி வெடித்ததாகவும், அதனைத் தொடர்ந்து இருவர் பற்றைக்குள்ளிருந்து ஓடிமறைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

## கட்டுத்துவக்கு வெடித்து இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

மிருகவேட்டைக்காக தயாரித்த கட்டுத்துப்பாக்கி எதிர்பாராத விதமாகத் திடீரென வெடித்ததால் ஒருவர் படுகாயமடைந்தார்.

மன்னுர் சிலாவத்துறையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த முகம்மது சரீவ் பதகுல்லா (வயது 23) என்ற முஸ்லீம் இளைஞரே படுகாயமடைந்தவராவார். (56)

### ரூே விவகாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை தமிழக கடற்பிரதேசத்தில் இந்திய கடற்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துமாறும் திரு. கருணுநிதி பிரதமர் திரு. வி. பி சிங்கை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### மின்கம்ப சரிவினல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுல் இங்குள்ள மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு இதுதொடர்பாக அறிவித்தும் இதுவரையும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இங்குள்ள மக்கள் புகார் செய்துள்ளார்கள்.

### வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் பல முக்கிய விடயங்கள் குறித்து பேச்சுக்கள் நடாத்த அவர்களுக்கு தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலையை இந்தியா தொடர்ந்தும் அவதானித்து வருவதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி-து)

### கல்கத்தாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் கைது செய்யப்பட்டபின்னர் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவுக்குத் திருப்பியனுப்பப்பட்டார்கள்.

இந்த மூன்று இளைஞர்களும் மாணவர்கள். இவர்கள் பம்பாயிலிருந்து லண்டனுக்குப் பயணமாக இருந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

டாக்கா, பாங்கொக் ஊடாக இவர்கள் லண்டனுக்குப் பயணமாக இருந்ததாக விசாரணையின்பொழுது தெரியவந்தது.

டாக்காவிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தின் மூலம் இவர்களுடைய பயண தஸ்தாவேஜுகள் போலியென்று உறுதிப்படுத்தப்பட்டதாக டாக்கா விமான நிலைய விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (153)

## ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி அர்ச் பிலிப் நேரியார் ஆலய நவநாள் உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

## கல்வி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்முறைசாராக் கல்வி போதனுசிரியர்களுக்கான சேவைக்கால கல்வி வகுப்புஎதிர்வரும் 20,21,22-ம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற ஏற்பாடகியுள்ளது (152)

## முதுகலைமாணி பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழப்பாணம் பல்கலைக்கழக முதுகலைமாணி [பொருளியல்] 1990-ம் ஆண்டுப் பரீட்சையில் செல்வி கே. வேலுப்பிள்ளை சித்தியடைந்துள்ளார்.

முதுகலைமாணி (கல்வியியல்) பரீட்சையில் திரு. ஏ. ஜே. பெனடிக்ற் சித்தியடைந்துள்ளார், [153]

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப்பிரிவில் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு இலங்கை வங்கி சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதற்காக ஆலோசனைக்கூட்டமொன்றை எதிர்வரும் 26-ம் திகதி காலை 9 மணிசகு யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்தில் நடாத்தத் திட்டமிட்டிருக்கிறது.

முறைசாராக் கல்விப் பிரிவில் படித்து விட்டு வெளியேறிய மாணவர்கள் இதில் பங்கு பற்றுமாறு கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது. (152)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

[யாழ்ப்பாணம்]

இந்துசமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், உலக இந்து ஆராய்ச்சி நிலையத்தில் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இம்மாதம் 31ம் திகதி விண்ணப்ப முடிவு திகதியாகும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பொலனறுவை அரச செயலகத்தில் தமிழ்-சிங்கள அமய மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 21 வயதுக்குக் குறையாதவராகவும், 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 25-ம் திகதியாகும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இயந்திரவியல்தொழில் நுட்ப பீடம் கல்வி ஆண்டு 1990 இல் தொழில் நுட்பவியல் டிப்ளோமா புடவைக் கைத்தொழில் நுட்பவியல் சான்றிதழ் பாடநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

விண்ணப்ப முடிவு திகதி ஜுன் மாதம் 15-ம் திகதி ஆகும். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி நெறிகள் அக்டோபர் மாதம் ஆரம்பமாகும். (153)